# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## May 31, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த மே 22-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 68,138.4 கோடி டாலராக குறைந்துள்ளது. இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிப்பதாவது:

(i) நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த மே 22- ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 751.1 கோடி டாலர் குறைந்து, 68,138.4 கோடி டாலராக உள்ளது.

(ii) மே 15-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முந்தைய வாரத்தில், இது 809.4 கோடி டாலர் குறைந்து, 68,889.4 கோடி டாலராக இருந்தது.

(iii) மத்திய கிழக்கு போருக்கு முன்பாக, இந்த ஆண்டின் பிப். 27- ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் கையிருப்பு 72,849.4 கோடி டாலர் என்ற உச்சத்தைத் தொட்டது. அதன் பின்னர், செலாவணி சந்தையில் ரூபாயின் மதிப்பை நிலைநிறுத்த ரிசர்வ் வங்கி டாவர்களை விற்பனை செய்ததால் கையிருப்பு சரிவைக் கண்டு வருகிறது.

(iv) மே 22-ஆம் தேதியுடன் நிறைவடைந்த மதிப்பீட்டு வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத்துகள் 287.2 கோடி டாலர் குறைந்து, 54,303.2 கோடி டாலராக உள்ளது. டாலர் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகளாகும்.

(v) மதிப்பீட்டு வாரத்தில், இந்தியாவின் தங்கம் கையிருப்பு 453 கோடி டாலர் குறைந்து, 11,478.6 கோடி டாலராக உள்ளது சிறப்பு வரைவு உரிமைகள் (எஸ்டிஆர்) 7.7 கோடி டாலர் குறைந்து 1,874.8 கோடி டாலராக உள்ளது சர்வதேச நிதியத்தில் (ஐஎம்எஃப்) இந்தியாவின் கையிருப்பு 3.3 கோடி டாலர் குறைந்து, 481.8 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

2. அமேசான் உரிமையாளர் ஜெஃப் பெஸோஸின் 'ப்ளூ ஆரிஜின்' நிறுவனத்துக்குச் சொந்தமான ராக்கெட் ஒன்று சமீபத்திய சோதனையின்போது வெடித்துச் சிதறியதில் அதன் ஏவுதளம் கடும் சேதமடைந்துள்ளது.

(i) இதனால், அமேசானின் இணையச் சேவை செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தும் திட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன், வர்த்தக ரீதியிலான விண்வெளிச் சந்தையில் எலான் மஸ்க்கின் 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்தின் ஆதிக்கம் மேலும் வலுவடையும் சூழல் உருவாகியுள்ளது.

(ii) அடுத்த வாரம் விண்ணில் செலுத்தப்படவிருந்த 'நியூ கிளென்' ராக்கெட்டின் என்ஜின்களை இயக்கிப் பரிசோதித்தபோது, இந்த எதிர்பாராத விபத்து நிகழ்ந்தது. விபத்தில் ஏவுதளம் முழுமையாக சேதமடைந்துவிட்டதால், மறுசீரமைப்புப் பணிகளுக்கு குறைந்தபட்சம் 6 மாதங்கள் ஆகும் என பொறியாளர்கள்

மதிப்பிட்டுள்ளனர்.

(iii) அமேசான் நிறுவனம் தனது 'லியோ' இணையச் சேவைக்கான 3,200 செயற்கைக்கோள்களில் பாதியை வரும் ஜூலைக்குள் விண்ணில் செலுத்த நியூ கிளென் ராக்கெட்டைப் பெரிதும் நம்பியிருந்தது.

(iv) விபத்தால் அமேசானின் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி, நாசாவின் 'ஆர்டெமிஸ்' நிலவுப் பயணத் திட்டங்களிலும் இது சிக்கலை ஏற்படுத்தக் கூடும் என அஞ்சப்படுகிறது.

(v) ஏனெனில், இந்த ஆண்டு இறுதியில் ப்ளூ ஆரிஜின் நிறுவனத்தின் முதல் 'ப்ளூ மூன்' லேண்டரையும், 2028-ஆம் ஆண்டின் ஆர்டெமிஸ்-4 திட்டத்துக்கு முன்னதாக நாசாவின் இரண்டு ரோவர்களை நிலவுக்குக் கொண்டு செல்லவும் இதே நியூ கிளென் ராக்கெட் திட்டமிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட சாதனங்கள் இந்த ராக்கெடுக்கு ஏற்பவே வடிவமைக்கப்படுவதால், உடனடியாக மாற்று ராக்கெட்டுகளைப் பயன்படுத்துவது மிகவும் கடினமாகும்.

(vi) அந்தவகையில், இந்த விபத்தால் ஆர்டெமிஸ் திட்டங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்து வருவதாக நாசா தெரிவித்தது. அதேபோல், அமெரிக்க விண்வெளிப் படையும், தேசிய உளவுத் துறை அலுவலகமும் ப்ளூ ஆரிஜின் நிறுவனத்துக்கு வழங்கிய ஒப்பந்தத்தை ரத்து செய்யாமல் ஆதரவை உறுதிப்படுத்தின.

(vii) இவ்விபத்து ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்துக்குத் தற்காலிக லாபத்தைக் கொடுத்தாலும், ப்ளூ ஆரிஜின் நிறுவனத்தின் நீண்டகால வாய்ப்புகள் பாதிக்கப்படாது என்பது உறுதியாகியுள்ளது.

(viii) விண்வெளிச் சந்தைக்கு நீண்ட கால அடிப்படையில் மாற்று நிறுவனங்கள் தேவை என்பதால், பல நிறுவனங்கள் போட்டியிடும் தற்போதைய சூழல் மாறாது என நிபுணர்கள் தெரிவித்தனர்.

3. அடுத்த ஆண்டு டிஜியாத்ரா செயலியை கூடுதலாக 27 விமான நிலையங்களில் பயன்படுத்த வழிவகை செய்யப்படும் என்று விமான போக்கு வரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) இந்தியாவின் எண்ம (டிஜிட்டல்) பொது உள்கட்டமைப்பில் முக்கிய மைல்கல்லை டிஜியாத்ரா செயலி எட்டியுள்ளது. இந்தச் செயலியை 2.4 கோடிக்கும் அதிகமானோர் பதிவிறக்கம் செய்துள்ளனர். இதன்மூலம், 10 கோடிக்கும் அதிகமாக தங்குதடையற்ற பயணங்கள் சாத்தியமாகியுள்ளன. உலகளாவிய விமான போக்குவரத்தில் மிகவும் வெற்றிகரமான டிஜிட்டல் கண்டுபிடிப்பாக இந்தச் செயலி உள்ளது.

(ii) நேரடியாகப் பயண ஆவணங்களை சமர்ப்பித்து சரிபார்ப்பதற்கு பதிலாக, இந்தச் செயலி மூலம் முக அங்கீகார தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயணிகளின் அடையாளம் சரிபார்க்கப்படுகிறது. இது பயணிகளின் தங்குதடையற்ற போக்குவரத்துக்கு வழிவகுத்துள்ளது. இது விமான நிலைய முனையத்துக்குள் பயணி ஒருவர் நுழைவதற்கான சரிபார்ப்பு நேரத்தை 15 விநாடிகளில் இருந்து 5 விநாடிகளாக குறைத்துள்ளது.

(iii) தற்போது இந்தச் செயலியை நாட்டில் உள்ள 38 விமான நிலையங்களில் பயன்படுத்த முடியும். அடுத்த ஆண்டு கூடுதலாக 27 விமான நிலையங்களில் அந்தச் செயலியைப் பயன்படுத்த வழிவகை செய்யப்படும். தற்போது இந்தச் செயலியில் 11 மொழிகளில் சேவைகள் வழங்கப்படும் நிலையில், நிகழாண்டுக்குள் கூடுதலாக 11 மொழிகளில் சேவைகளை அளிக்க வேண்டும் என்பது குறிக்கோளாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இந்திய கடற்படை தலைமைத் தளபதி - தினேஷ்குமார் திரிபாதி

5. அரசு துறைகள் மீதான குறைகளை பொது மக்கள் இணையவழியில் தெரிவிக்க, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்துடன் கூடிய 'சமாதான் தீதீ' உரையாடல் தளத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் அறிமுகம் செய்தார்.

(i) இதுகுறித்து அவர் கூறுகையில், 'சமாதான் தீதீ' தளம் மூலம், அரசு துறைகள் மீதான தமது குறைகளை பொதுமக்கள் தங்கள் சொந்த மொழியில் பேசி எளிதாக தெரிவிக்கலாம். அந்தத் தளம் சில கேள்விகளை மட்டும் கேட்கும். அதைத்தொடர்ந்து பொது மக்களின் குறைகள் தொடர்பான அமைச்சகம், துறை, பிரிவை அந்தத் தளம் தாமாக கண்டறிந்து, அவர்கள் தெரிவிக்கும் குறைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பதிவு செய்யும் என்றார்.

6. குறைவான பருவமழை உணவுப் பொருள்களின் விலைகளில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று மத்திய நிதியமைச் சகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) 'சூப்பர் எல் நினோ'-வால் நாடு முழுவதும் கடும் வெப்பம் வாட்டி வதைத்து வருகிறது. இதுபோல மாறிவரும் தட்பவெப்ப நிலையைச் சுட்டிக்காட்டியுள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், இந்தாண்டு தென்மேற்குப் பருவமழை வழக்கத்தைவிட குறைவான அளவிலேயே பெய்யக்கூடும் எனக் கணித்துள்ளது.

7. மேகாலய மாநிலத்தின் உம்ரோய் நகரில் 13 நாட்டு ராணுவங்கள் பங்கேற்ற 'பிரகதி' எனப்படும் ஒருங்கிணைந்த பயிற்சி நிறைவடைந்தது.

(i) இந்தியா, பூடான், கம்போடியா, லாவோஸ், வியத்நாம், இந்தோனேசியா, மலேசியா, மாலத்தீவு, மியான்மர், நேபாளம், பிலிப்பின்ஸ், செஷல்ஸ், இலங்கை ஆகிய 13 நாடுகளைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டனர். இதில் 200-க்கும் மேற்பட்ட வீராங்கனைகளும் பங்கேற்றனர். இதுகுறித்து ஒருங்கிணைந்த ராணுவப் பயிற்சியின் இயக்குநர் சந்தீப் பூனியா கூறியதாவது:

- இந்திய கடல் பிராந்திய நாடுகளின் ராணுவ வளர்ச்சி மற்றும் மாற்றத்துக்கான ஒத்துழைப்பே பிரகதி என அழைக்கப்படுகிறது.
- நட்புறவு நாட்டு ராணுவங்களோடு இணைந்து பயிற்சியின்போது மலைகள் மற்றும் வனப் பகுதியில் கிளர்ச்சி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ராணுவ வீரர்களிடையே ஒத்துழைப்பை அதிகரிக்க கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.
- ராணுவ நடவடிக்கைகளுக்கான வியூகங்கள், தொழில்நுட்பம் மற்றும் நடைமுறைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. ராணுவ வீரர்களுக்கு

ஹெலிகாப்டர் மூலம் கண்காணிப்பு மற்றும் மீட்புப் பணிகள், வெடிகுண்டுகளைக் கண்டறிந்து செயலிழக்க வைக்கும் பயிற்சியும் வழங்கப்பட்டன என்றார்.

- சிறப்பான பயிற்சியை அளித்த இந்திய ராணுவத்துக்கு பூடான் செஷல்ஸ், பிலிப்பின்ஸ் உள்ளிட்ட நாடுகள் நன்றி தெரிவித்தன.

(ii) உள்நாட்டுத் தயாரிப்பு அதிகரிப்பு:

பிரகதி ராணுவப் பயிற்சி குறித்து இந்திய ராணுவத்தின் வடிவமைப்பு பிரிவின் கூடுதல் இயக்குநர் மேஜர் ஜெனரல் சி.எஸ்.மான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

- தற்சார்பு இந்தியா முன்னெடுப்பால் இந்திய ராணுவம், இந்திய விமானப் படை, இந்திய கடற்படை என முப்படை சார்ந்த சாதனங்களை உள்நாட்டிலேயே தயாரிக்கும் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதேசமயம் பாதுகாப்புத் துறை சார்ந்த உபகரணங்களின் வெளிநாட்டு ஏற்றுமதியையும் அதிகரிக்க வேண்டும். இதுபோன்ற கூட்டு ராணுவப் பயிற்சிகளை நடத்துவதன்மூலம் நமது உள்நாட்டுத் தயாரிப்புகள் குறித்து அவர்களிடம் எடுத்துரைத்து ஏற்றுமதியை அதிகரிக்க முடியும்' என்றார்.

8. மியான்மர் அதிபரின் இந்தியப் பயணம்

(i) இந்தியா வருகை

- மியான்மர் அதிபர் மின் ஆங் ஹ்லைங் (Min Aung Hlaing) 2026 மே 30-ஆம் தேதி சனிக்கிழமை ஐந்து நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்தார்.
- அவர் முதலில் பீகார் மாநிலத்தின் Gaya நகருக்கு வந்தடைந்தார். அங்கு பீகார் ஆளுநர் Syed Ata Hasnain மற்றும் மாநில அமைச்சர் Vijay Kumar Sinha ஆகியோர் அவரை வரவேற்றனர்.
- அவரது பயணத் திட்டத்தின்படி, ஞாயிற்றுக்கிழமை கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்பதோடு, செவ்வாய்க்கிழமை Mumbai நகரில் தொழில்துறை பிரதிநிதிகளுடன் உயர்மட்ட ஆலோசனைகளையும் நடத்த உள்ளார்.

(ii) மத மற்றும் கலாச்சார நிகழ்வுகள்

- கயாவில் தங்கியிருந்தபோது, உலகப் புகழ்பெற்ற Mahabodhi Temple கோவிலுக்கு சென்று வழிபாடு செய்தார்.
- புத்த மதத்தினரின் மிக முக்கிய புனிதத் தலங்களில் ஒன்றாக விளங்கும் இந்த ஆலயம் UNESCO உலக பாரம்பரியச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் மியான்மர் இடையே நிலவும் ஆழமான ஆன்மிக, வரலாற்று மற்றும் மக்களிடையேயான உறவுகளை இந்தப் பயணம் பிரதிபலிப்பதாக இந்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

(iii) வியூக மற்றும் இருதரப்பு பேச்சுவார்த்தைகள்

- இந்தப் பயணத்தின் முக்கிய நிகழ்வாக, 2026 ஜூன் 1-ஆம் தேதி தில்லியில் இந்தியப் பிரதமர் Narendra Modi உடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

- இந்தச் சந்திப்பில் பின்வரும் முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது:
    - எல்லைப் பாதுகாப்பு
    - பிராந்திய இணைப்புத் திட்டங்கள் (Regional Connectivity)
    - வர்த்தக உறவுகள்
    - பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பு
- அதிபருடன் மியான்மர் அமைச்சர்கள், உயரதிகாரிகள் மற்றும் தொழில் துறை பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்ட குழுவும் இந்தியா வந்துள்ளது.

(iv) அரசியல் மற்றும் தூதரகப் பின்னணி

- முன்னாள் ராணுவத் தளபதியான மின் ஆங் ஹ்லைங், 2025 டிசம்பர் மற்றும் 2026 ஜனவரியில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களைத் தொடர்ந்து அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2026 ஏப்ரலில் பதவியேற்றார்.
- 2021-ஆம் ஆண்டு ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு மியான்மர் உள்நாட்டு மோதல்கள் மற்றும் அரசியல் நிலையற்ற சூழ்நிலையை எதிர்கொண்டு வருகிறது.
- அண்டை நாடுகளுடனான தொடர்பை வலுப்படுத்தும் கொள்கையின் அடிப்படையில் இந்தியா மியான்மருடன் தொடர்ந்து தொடர்பைப் பேணிவருகிறது.
- இதன் ஒரு பகுதியாக, மியான்மர் அதிபரின் பதவியேற்பு விழாவில் இந்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

(v) இந்தியாவுக்கான மியான்மரின் வியூக முக்கியத்துவம்

- இந்தியாவின் மகாசாகர் (MAHASAGAR), Neighbourhood First (அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை) மற்றும் Act East (கிழக்கு நோக்கிய செயல்பாட்டுக் கொள்கை) ஆகிய மூன்று முக்கிய வெளிநாட்டுக் கொள்கைகளின் சங்கமப் பகுதியில் மியான்மர் அமைந்துள்ளது.
- இந்தியா மற்றும் Myanmar இடையே சுமார் 1,640 கிலோமீட்டர் நீளமான நில எல்லை பகிரப்பட்டுள்ளது.
- மியான்மர், இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான Nagaland மற்றும் Manipur ஆகியவற்றுக்கு அண்டையாக அமைந்துள்ளது.
- இந்தப் பகுதிகள் பல ஆண்டுகளாக கிளர்ச்சியாளர் மற்றும் ஆயுதக் குழுக்களின் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதால், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் எல்லை மேலாண்மையில் மியான்மர் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது